மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, குறிப்பிட்ட சாமி மட்டுமல்ல, அதிக வருமானம் வரக்கூடிய கோயில்களிலிருந்து நிதி பெற்று, பொதுநிதியில் வைத்துக் கொண்டு, நிதி வசதிக் குறைவாக உள்ள கோயில்களுக்கு வழங்கு கிறோம். அந்த அடிப்படையிலேதான் இதை வழங்கியிருக்கிறோம்.

சாணவாயு நிலையங்கள்

44 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:
திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:
திரு. என். கே. பழனிசாமி: } மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாணவாயு நிலையம் துவக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இதுவரை சுமார் 384 சாண எரிவாயுச் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இதற்கிணையான அளவு சாண எரிவாயுச் சாதனங்கள் நிறுவும் வேலை பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. 1975-76-ம் ஆண்டு முடிவுக்குள் 2,000 சாண எரிவாயுச் சாதனங்கள் அமைத்திட முடியும் எனக் கருதப்படுகின்றது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த கோபர் காஸ் பிளாண்டாலே கிடைக்கிற காஸைக் கொண்டு, மின்சார உபயோகத்தைக் குறைக்க முடியும் என்றும் அனாவசியமானச் செலவைக் குறைக்க முடியும் என்றும் சொல்கிறார்கள். ஆகவே, இது எந்த எந்த வழிகளிலே பிரயோஜனப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் சொல்வார்களா? எந்த எந்தப் பிரதேசத்திலே விஸ்தரிக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, எண்ணெய் மற்றும் உரத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க வேண்டுமென்று மத்திய திட்டக் குழு இப்படிப்பட்ட ஒரு சாண எரிவாயுப் பொருளை நாடு பூராவும் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். அதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து 25 சதவிகிதம் மானியம் வழங்குகிறார்கள். பொதுவாக, மற்ற எரி பொருள்களை விறைக்குவதற்குப் பதில் இந்தச் சாண எரி வாயு மூலமாக மற்ற பொருள்களை மிச்சப்படுத்தலாம் என்ற

நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை அனுமதித்திருக்கிறார்கள். இந்த எரிவாயுவைக் கொண்டு விளக்குகளைக் கூட எரிக்கலாம் என்பதை சமீபத்திலே கண்டுபிடித்திருக்கிறார்கள். அதிகமாக, இதை எரிபொருளாகப் பயன்படுத்தி, நாடு பூராவும் உபயோகித்து கொண்டிருக்கிறார்கள். இதற்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தேவையான கடன் உதவி தரவேண்டுமென்று மத்திய சர்க்கார் மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் 1974-75-ல் 2,000 சாண எரிவாயு சாதனங்களை அமைக்கத் திட்டம் திட்டினோம். ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தேவையான அளவுக்குக் கடன் கொடுக்க முன்வராத காரணத்தால், குறைந்த அளவுதான் தற்பொழுது வழங்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் க. நாகராஜன்: தலைவர் அவர்களே, இந்த கோபர் கேஸிலிருந்து உற்பத்தியாகும் எரிவாயுவை சிலிண்டர்களில் சேமித்து வைக்கும் வழிவகை ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அதுபோன்று கண்டுபிடிக்கின்ற முயற்சியை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, சிலிண்டர்களில் பிடித்துவைக்கின்ற அளவில் மிகப் பெரிய திட்டமாக உருவாக்கப்படவில்லை. ஆங்காங்கே கிராமங்களிலோ அல்லது நகரங்களிலோ சுமார் 6, 8 கால்நடைகள் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்—அவைகளை வைத்துப் பால் கறந்துகொண்டிருக்கின்றவர்கள்—அல்லது விவசாயிகளாக இருக்கிறவர்கள் சிறிய திட்டமாக மேற்கொள்ளக்கூடிய திட்டம்தான் இது. பெரிய அளவில் சிலிண்டர்களில் சேமித்து வைக்கக்கூடியத் திட்டத்தை இன்னும் உருவாக்கவில்லை.

THIRU B. VENKATASWAMY : Is it not a fact that the manurial value of the Gobar Gas will be doubled? At the same time. electricity can also be produced to run motor. May I know from the Hon. Minister for Hindu Religious Endowments whether any such investigation has been made and whether any liberal loans will be given so as to enable the ryots to make use of the Scheme, which will also enable a common man to avail such a scheme?

1975 அக்டோபர் 24]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மின்சார மோட்டார் ஓட்டுவதற்கு இந்த சாண எரிவாயுவைப் பயன்படுத்து கிறார்களா என்று தகவல் எனக்குத் தெரியாது. இந்த சாண எரிவாயுவைப் பயன்படுத்துகின்ற முறை கதர்—கிராமக் கைத்தொழில் வாரியத்தின்மூலம் செய்யப்படுகிறது. அதற்காக 25 சதவிதம் மானியமாகவும் 75 சதவிதம் தேசிய வங்கிகளின் மூலமாக கடனுகவும் கொடுக்கப்படுகிறது. இதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த சாதனம்பற்றி ரெவின்யூ இலாகாவில் தகுந்த விளம்பரம் செய்வது கிடையாது. பல விவசாயி கள் யாரை இதற்காக அணுகவேண்டும், யார் இதைச் செய்து கொடுப்பார்கள் என்ற விவரங்கள் எல்லாம் தெரியாமல் கஷ்டப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் தினத்தந்தி பத்திரிகையிலே முதல் பக்கத்திலே—எது எதற்கோ விளம்பரத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்—விளம்பரம் செய்து நல்ல முறையிலே பரப்புவதற்கு முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே சொல்லிவிட்டீர்கள், இதுவே ஒரு விளம்பரம் ஆகிவிட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினரே இந்தப் பணியை மேற்கொண்டு தன்னுடைய தொகுதியிலுள்ளவர் களுக்குத் தெரிவித்தால் அந்த சாதனங்களை அமைத்துக் கொடுக்க வாரியம் தயாராக இருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன்: இந்த எரிவாயுவைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிற சாணத்தில், பயன்படுத்திய பிறகு உரத் தன்மை இருக்கிறதா? உரத் தன்மை அதன் மூலம் போய்விடுகிற தென்றால், உரம் வீணுவதை அரசு தடுக்க என்ன முயற்சி செய் திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சாணத்திலிருந்து எரிவாயு பிரித்தெடுக்கப் பயன்படுத்திய பிறகு அந்தச் சாணத்திலுள்ள உரத்தன்மை கெடாது; உடனடியாக உரமாகப் பயன்படுத்தலாம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: இதை சிலிண்டர்களில் சேமித்து வைக்கப்படக்கூடிய முறையில் ஏதாவது ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா? அல்லது ஆராய்ச்சி செய்ய, ஊக்குவிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Gobar Gas plant Scheme has become popular and many ryots are trying to introduce it. It requires a lot of money and cattle heads. Unfortunately, in the border areas cattle are being sent to nearby slaughter houses. May I know from the Hon. Minister for Hindu Religious Endowments whether any scheme will be introduced to stop sending of cows to slaughter houses in future?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி யோசிக்கலாம்.

Flushout latrines in Town Panchayats

*45 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether a comprehensive scheme of converting dry latrines into flushout latrines in the Town Panchayats in the State, is under the consideration of the Government; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) & (இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள சில நகராட்சி நகரங்களில் ஆராய்ச்சி செயல் திட்டத்தின் கீழ் ரூ. 1.20 லட்சம் செலவில் 1973-74 நிதி ஆண்டில் ஒரு சோதனை ஏற்பாடாக 1,000 திறந்த வெளிக் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்ற சமூக நலத்துறையால் 19—2—1974 நாளிட்ட 114-ம் எண்ணில் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மேற்படி திட்டம் 1974-75 நிதி ஆண்டில் ரூ. 5 லட்சம் செலவில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மேலும் சில பேரூராட்சிகளிலும் தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, பல இடங்களிலே நகரப் பஞ்சாயத்துக்களிலேயும் சரி, நகர மன்றங்களிலேயும் சரி, கழிப்பிடங்கள் சரிவர சுத்தம் செய்யப்படாததால் சுகாதாரக் கேடுகளுக்கு இடமாக இருக்கின்றனவே, இதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன அவசர நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது?